

முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், ஆர்.எஸ்.புரம் பகுதி கழகத்தின் சார்பில் பகுதி கழக செயலாளர் கார்த்திக் செல்வராஜ் ஏற்பாட்டில் 300 பேருக்கு அசைவ அறுசுவை உணவினை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி வழங்கினார். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ஆ.தமிழ்மறை, மேற்கு மண்டலகுழுத்தலைவர் தெய்வானை தமிழ்மறை, ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா, வட்டக் கழக செயலாளர்கள் ஜெகதீஸ், சுலைமான், பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.நாசர், ஆறுச்சாமி, நவ்ஷாத், மகேஸ்வரன், ஆல்வின், தம்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், காந்திபார்க் பகுதி, மேற்கு மண்டலம், வார்டு எண்: 73ல் 2025– 2026ம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது விநியோகக் கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் பகுதி கழக செயலாளர் சோமு (எ) சந்தோஷ், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், மாவட்ட துணை செயலாளர் ஜெயந்தி சக்திவேல், வட்டக் கழக செயலாளர்கள் குமரேசன், ராஜேஷ், தை.ரவிச்சந்திரன், மகேந்திரன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ஆ.தமிழ்மறை, மேற்கு மண்டலகுழுத்தலைவர் தெய்வானை தமிழ்மறை, நரசிபுரம் ஊராட்சி முன்னாள் தலைவர் என். ஆர்.கார்த்திகேயன் உள்பட மாநில, மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நெல்லை - சென்னை இடையே வாராந்திர அதிவிரைவு சிறப்பு ரயில்!

## தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜூலை 5-

நெல்லை - சென்னை எழும்பூர் இடையே வாராந்திர அதிவிரைவு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தென் தமிழகத்திலிருந்து சென்னைக்கு செல்லும் முக்கிய விரைவு ரயில்கள் அனைத்திலும் முன்பதிவு பயணச்சீட்டுகள் விரைவில் விற்றுத் தீர்ந்துவிடுவதால் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான முன்பதிவு இல்லாத பெட்டிகளை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் நிலவி வருகிறது.

விடுமுறை நாள்களில் ஏற்படும் கூட்ட நெரிசலைக் குறைக்கும் நோக்கில், நெல்லை - சென்னை எழும்பூர் இடையே வாரந்திர சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளது. திருநெல்வேலி -சென்னை எழும்பூர் இடையே இயக்கப்படும் சிறப்பு ரயில், ஜூலை 9, 16, 23, 30 ஆகிய தேதிகளில் வியாழக்கிழமை தோறும் இயக்கப்படும். திருநெல்வேலியில் இரவு 11.35 மணிக்கு புறப்பட்டு, சென்னை எழும்பூருக்கு மறுநாள் காலை 10.45 மணிக்கு வந்தடையும்.

அதேபோல, சென்னை எழும்பூர் திருநெல்வேலி இடையே இயக்கப்படும் சிறப்பு ரயில், ஜூலை 10, 17, 24, 31 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். சென்னை எழும்பூரில் இருந்து பிற்பகல் 1.35 மணிக்கு புறப்பட்டு, அதேநாள் நள்ளிரவு 1 மணிக்கு திருநெல்வேலி சென்றடையும்.

இந்த சிறப்பு ரயில் கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், மதுரை, கொடைக்கானல் ரோடு, திண்டுக்கல், திருச்சி, ஸ்ரீரங்கம், அரியலூர், விழுப்புரம், மேல்மருவத்தூர், செங்கல்பட்டு, தாம்பரம் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

## செஞ்சியில் காலாவதியான சாக்லேட் சாப்பிட்ட

# 18 பள்ளி மாணவ-மாணவிகள் மயக்கம்! அரசு மருத்துவமனை தீவிர பிரிவில் அனுமதி!

## விஜயகுமார், மொக்தியார் அலி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல்!

செஞ்சி, ஜூலை 5-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி விழுப்புரம் சாலையில் ஊரா ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது இப்பள்ளியில் ஆறாம் வகுப்பில் 34 மாணவ மாணவிகள் படிக்கின்றனர் இந்த வகுப்பில் படிக்கும் காவியா ஸ்ரீ என்ற மாணவிக்கு பிறந்த நாளையடுத்து மாணவி பள்ளிக்கு வரும் வழியில் உள்ள ஒரு பங்கடையில் சாக்லேட் பாக்கெட் வாங்கி வந்து வகுப்பில் படிக்கும்மாணவ -மாணவிகளுக்கு கொடுத்துள்ளார்.

சாக்லேட்டை பிரித்து சாப்பிட்ட ரோபோ ஸ்ரீ , லேகா ஸ்ரீ, விஷ்ணு, ஆகாஷ், குமார் உள்ளிட்ட 18 மாணவ மாணவிகளுக்கு வயிற்று வலி ஏற்பட்டு மயக்கம் அடைந்தனர்.

இது குறித்து மாணவர்கள் பள்ளி ஆசிரியர்களிடம் தெரிவித்தவுடன் ஆசிரியர்கள் உடனடியாக அனைவரையும் செஞ்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பள்ளி குழந்தைகளுக்கு அரசு தலைமை மருத்துவ அலுவலர் டாக்டர் வேணுகோபால் தலைமையிலான மருத்துவர்கள் பரிசோதனை செய்து உடனடியாக முதல் உதவி சிகிச்சை அளித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று வயிற்று வலியால் பாதிக்கப்பட்ட மாணவ மாணவிகளை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

மேலும் குழந்தைகளுக்கு தேவையான அனைத்து மருத்துவ சிகிச்சையும் மேற்கொள்ள வேண்டும் என அரசு மருத்துவர்களிடம் அவர்கள் அறிவுறுத்தினர்.

மேலும் இதுகுறித்து செஞ்சி காவல் ஆய்வாளர் விநாயக முருகன்,வட்டார வளர்ச்சி அலுவலர் மணிமாறன்வட்டார வளர்ச்சி அலுவலர் மணிமாறன்உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆகியோர்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். காலாவதியான சாக்லேட்டை விற்றகடையில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர் மணி உள்ளிட்ட உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு விசாரணை செய்து வருகின்றனர்.

# தமிழ்நாட்டிற்கான முதலீடுகளைக் குறிவைக்கும் ஆந்திரா!

## த.வெ.க, அரசு நடவடிக்கை எடுக்குமா? – பொருளாதார வல்லுனர்கள் கேள்வி!

சென்னை, ஜூலை 5 -

தமிழ்நாட்டிற்கான முதலீடுகளை ஆந்திரா குறிவைத்து வருகிறது. இதனை தடுக்க த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா என பொருளாதார வல்லுநர்கள் பல்வேறு கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பெரிய தொழில் நிறுவனங்கள் ஆலை அமைக்க வசதியாக சிப்காட் எனும் தொழிற்பூங்காவை தமிழ்நாடு அரசு கடந்த காலங்களில் இருந்து அமைத்து வருகிறது. அதன்படி, பல்வேறு பெரு நிறுவனங்களும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் தொழில் தொடங்கவே விரும்புகின்றன.

இச்சூழலில் கடந்த தி.மு.க. ஆட்சியின் போது திருவள்ளூர் மாநெல்லூர் பகுதியில் சிப்காட் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி பணிகள் நிறுத்தப்பட்ட நிலையில், மீண்டும் இப்பணிகள் முழு வேகத்தில் நடைபெறவில்லை.

இந்நிலையில், தமிழ்நாடு உடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்த நிறுவனங்களின் முதலீடுகளை, ஸ்ரீசிட்டி தொழிற்பூங்காவை விரிவாக்கம் செய்து ஈர்க்க ஆந்திரா முயற்சித்து வருகிறது. இதற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு உடனடியாக முட்டுக்கட்டை போட வேண்டும் என பொருளாதார வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே, பல்வேறு நிறுவனங்கள், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் முதிர்ச்சியற்ற அரசு மற்றும் ஊசலாடும் அரசியல் சூழல் காரணமாக முதலீடுகளை வேறு மாநிலங்களுக்கு மாற்றியது குறிப்பிடத்தக்கது.

## மாணவிகள் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை!

# கீழப்பாவூர் அரசு கலைக்கல்லூரி பேருந்து நிறுத்தத்தை உடனடியாக இடமாற்றம் செய்க!

## தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் கோரிக்கை மனு!

தென்காசி, ஜூலை 5-

தென்காசி தெற்கு மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங்கிடம் கொடுத்துள்ள கோரிக்கை மனு விவரம் வருமாறு.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தாலுகா, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கழுநீர்குளம் ஊராட்சி பகுதியில் தமிழ்நாடு அரசின் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் ஆயிரத்திற் கும் மேற்பட்ட மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தினமும் அரசு மற்றும் தனியார் பேருந்துகளை நம்பியே கல்லூரிக்கு வந்து செல்கின்றனர்.

இக்கல்லூரிக்கென அரசு மகளிர் கலைக்கல்லூரி பேருந்து நிறுத்தம் என்ற பெயரில் அமைக்கப் பட்டுள்ள பேருந்து நிறுத்தம் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் (TNRSP) பணியின் போது கல்லூரி நுழைவு வாயிலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக மாணவியர்கள் நான்கு வழிச்சாலையை கடந்து பேருந்தில் ஏறவும்,இறங்கிய பின்னர் மீண்டும் சாலையை கடந்து கல்லூரிக்குச் செல்லவும் வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்கிலிருந்து கிழக்கே அதிவேகமாக வரும் வாகனங்களால் மாணவி யர்கள் உயிருக்கு ஆபத்தான சூழலில் சாலையைக் கடக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே சில மாணவியர்கள் விபத்தில் சிக்கிகாயமடைந்துள்ளதாகவும், தினந்தோறும் அச்சத்துடன் கல்லூரிக்குச் சென்றுவருவதாகவும் கூறி பேருந்து நிலையத்தை கல்லூரி ஆர்ச் அருகே இட மாற்றம் செய்ய கல்லூரி தரப்பில் கோரிக்கையும் வைக்கப் பட்டுள்ளது.மேலும் இந்த பேருந்து நிலையம் பயன்பாடற்ற நிலையிலும் உள்ளது.

ஆகையால் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்கள் அருள்கூர்ந்து கல்லூரி மாணவியர்களின் உயிர் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசு கலைக்கல்லூரி பேருந்து நிறுத்தத்தை கல்லூரி நுழைவுவாயில் (ஆர்ச்) அருகே உடனடியாக இடமாற்றம் செய்து மாணவியர்கள் பாது காப்பாக பேருந்தில் ஏறி இறங்க தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகளுக்கு (TNRSP) ஆவன செய்ய தங்களை கேட்டுக் கொள்கிறேஇவ்வாறு அவர் கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.

# பட்டப்பகலில் இரட்டைக் கொலையால் நெல்லையில் பதற்றம்!

## தந்தையை கொடூரமாக வெட்டிக் கொன்ற கும்பல்!

நெல்லை, ஜூலை 5–

திருநெல்வேலி அருகே பட்டப்பகலில் தந்தை, மகனை கொடூரமாக கொலை செய்த மர்ம கும்பல், தந்தையின் தலையை வெட்டி நடு சாலையில் வைத்துவிட்டு சென்ற சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை மாவட்டம், கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள மூலச்சி கிராமத்தைச் சேர்ந்த காளிமுத்து, தனது இரண்டு மகன்களுடன் இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். காரில் அவரை பின்தொடர்ந்து வந்த மர்ம கும்பல், திடீரென காரால் இருசக்கர வாகனத்தின் மீது மோதி காளிமுத்துவை கீழே தள்ளியுள்ளது. காளிமுத்துவின் 5 வயது மகன் ஜெயராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். தப்பியோட முயன்ற காளிமுத்துவை விரட்டிச் சென்ற அந்த கும்பல், சரமாரியாக வெட்டிக் கொலை செய்தது. பின்னர், தலையை தனியாக துண்டித்து, 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு கொண்டு சென்ற அந்த கும்பல், கல்லிடைக் குறிச்சி அருகே கரம்பை பகுதியில் சாலையின் மையத்தில் வைத்து விட்டு தப்பிச் சென்றது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், படுகாயங்களுடன் உயிருக்குப் போராடிய காளிமுத்துவின் மூத்த மகன் சின்னராஜை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கொலை செய்யப்பட்ட காளிமுத்து, ஜெயராஜின் உடல்களை மீட்டு போலீசார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். ஏற்கனவே, இப்பகுதியில் நடைபெற்ற ஒரு கொலைக்கு பழிக்குப் பழியாகவே இந்த இரட்டைக்கொலை சம்பவம் அரங்கேறியிருப்பதும், காளிமுத்து வின் ஊரைச் சேர்ந்தவர்கள் இதில் ஈடுபட்டிருப்பதும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. பட்டப்பகலில் நடைபெற்றுள்ள இரட்டை கொலை சம்பவத்தால், கல்லிடைக்குறிச்சியில் பதற்றம் நிலவி வருகிறது.



கோவை வடக்கு மாவட்டம், தெலுங்குபாளையம் பகுதி, வட்டக் கழக முன்னாள் செயலாளர் ராஜேஷ்குமார் சகோதரர் வார்டு இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் வினோத்குமார் மறைவையொட்டி அன்னாரது உடலுக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் செல்வபுரம் பகுதி செயலாளர் கேபிள் மணி, வட்டக் கழக செயலாளர்கள் சிவகணேஷ், மின்னல் சிவா, இளைஞர் அணி விஜி, குணா, ராஜசேகர், அசோக், செல்வகணேஷ் உடன் இருந்தனர்.

## சேலத்தில் வேளாண் நிதிநிலை அறிக்கை கருத்து கேட்பு

# 3 அமைச்சர்கள் முன்னிலையில் விவசாயிகள் கடும் வாக்குவாதம்!

## தேர்தல் அறிக்கைப்படி பயிர்க்கடன் முழுதும் ரத்து செய்ய வலியுறுத்தல்!

சேலம், ஜூலை 5 -

முதல்வர் விஜய் தேர்தல் அறிக்கையில் சொன்னபடி பயிர்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என 3 அமைச்சர்கள் முன்னிலையில் நடந்த வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிப்பு கருத்து கேட்பு கூட்டத்தில் 10 மாவட்ட விவசாயிகள் ஆவேசமாக கூறினர். தமிழ்நாடு வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கை தயாரிப்பு குறித்த விவசாயிகள் கருத்து கேட்பு கூட்டம், சேலம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. வேளாண், உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் தலைமை வகித்தார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார், கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் விஜய் பாலாஜி முன்னிலை வகித்தனர். சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், கோவை, நீலகிரி, கரூர், கள்ளக்குறிச்சி ஆகிய 10 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று கருத்துக்களை தெரிவித்தனர். அப்போது அவர்கள் முதல்வர் விஜய் தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி எவ்வித நிபந்தனையுமின்றி விவசாயி களின் பயிர்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

விவசாயிகள் வீதியில் இறங்கி அறப்போராட்டம் நடத்தி வரும் நிலையில், அதற்கு மதிப்பளித்து நடந்து கொள்ள வேண்டும். விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்யவேண்டும். வேளாண் துறை 2.0 திட்டத்தை செயல்படுத்தி, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் துறையை இணைத்து திட்டங்களை கொண்டு வர வேண்டும். கள்ளுக்கான தடையை நீக்க வேண்டும்.

கள்ளை அரசே கொள்முதல் செய்து, டாஸ்மாக் மூலம் விற்க வேண்டும் என வலியுறுத்தினர். கூட்டத்தில் பங்கேற்ற பா.ம.க. எம்.எல்.ஏ. சவுமியா அன்புமணி நிருபர்களிடம் கூறுகையில், "விவசாயிகளின் ரூ.18 ஆயிரம் கோடி பயிர் கடனையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். மகாராஷ்டிராவில் கூட்டுறவு, தேசியமயம், தனியார் வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய ரூ.35 ஆயிரம் கோடியை தள்ளுபடி செய்துள்ளார்கள்," என்றார்.

*** அதிகாரிகள் கட்டுப்பாடு!**

கூட்டம் துவங்குவதற்கு முன்பு, கூட்டரங்கில் 10 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் வேளாண் அதிகாரிகள் வந்து, ஒரு சிலருக்கு மட்டுமே கருத்து தெரிவிக்க அனுமதி வழங்கப்படும். அதன்படி கருத்து தெரிவியுங்கள் என்று கட்டுப்பாடு விதித்தனர். இதற்கு விவசாயிகள் அனைவரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். 15க்கும் மேற்பட்ட விவசாயிகள் எழுந்து அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.